# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 17.08.2018

## தமிழக நிகழ்வுகள்

- இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் மும்முனை டீசல் மின்தொடர் ரயில் பெட்டிகள், மற்றும் 1600 குதிரை திறன் கொண்ட அதிநவீன வசதிகள் மிக்க "டிரெயின்-18" என்ற பெயரிலான இரயில் பெட்டிகள் சென்னையில் உள்ள ஒருங்கிணைந்த ரயில் பெட்டி தயாரிப்பு தொழிற்சாலையில் (ஐ.சி.எ.ஃ.ப்) தயாரிக்கப்பட உள்ளது.
  - நாட்டிலேயே முதன்முறையாக "டிரெயின்-18" வகை இரயில் பெட்டிகளை சென்னை ICF தயாரிக்க உள்ளது.

- பேரிடர் காலங்களில் மக்களுக்கு தகவல்களை பரிமாற்றம் செய்வதற்கு ஏதுவாக தமிழக மின்னாளுமை முகமையின் மூலமாக www.tnsdma.tn.gov.in என்ற புதிய இணையதளம் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.
  - இந்த வலைதளத்தில் தமிழ்நாட்டின் புவியியல் அமைப்பு, வானிலை அறிக்கைகள் உட்பட பேரிடர்களை எதிர் கொள்ள எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையங்களின் தொடர்பு எண்கள் போன்றவை அடங்கியுள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- "பிட்ச் டு மூவ்" (Pitch to move) - இயக்கம் - இந்தியாவில் வளர்ந்து வரும் தொழல் முனைவோர் தங்கள் வர்த்தக வளர்ச்சி குறித்த கருத்துக்களை ஒரு சிறப்பான நீதிபதியிடம் வழங்க ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்கும் நோக்கத்தை கொண்ட இந்த இயக்கமானது நிதி ஆயோக்கினால் தொடங்கப்பட்டுள்ளது.
  - இதன் மூலம் தொழில் முனைவோர்களின் நிலையை அரசின் பார்வைக்கு எடுத்துச் செல்ல இயலும்.

- இந்தியாவின் 72வது சுதந்திர தினத்தின் நினைவாக, நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் உள்ள இந்தியத் தூதரகத்தின் மூலமாக இந்தியா சார்பில் 30 ஆம்புலன்ஸ்களை நேபாளத்தில் உள்ள மருத்துவமனைகளுக்கு வழங்கியுள்ளது.
    - நேபாளத்துக்கான இந்திய தூதர் - மஞ்சீவ் சிங் புரி

## உலக நிகழ்வுகள்

- மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள மாலியில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் இப்ராஹிம் பூபக்கர் கெய்டா மீண்டும் வெற்றி பெற்று மாலியின் அதிபராகிறார்.

- உலகத்தை மாற்றியமைத்த 100 பெண்களின் பட்டியலை பிபிசி ஹிஸ்டரி பத்திரிக்கையானது (BBC History Magazine) தொகுத்து வெளியிட்டுள்ளது.
    - இப்பட்டியலில் இருமுறை நோபல் பரிசு பெற்ற "மேரி க்யூரி" முதலிடத்தைப் பெற்றுள்ளார்
    - இந்தியாவில் வாழ்ந்த அன்னை தெரசா 20-வது இடத்தைப் பெற்றிருக்கிறார்.
- **குறிப்பு**
    - மேரி கியூரி – 1903ம் ஆண்டு பொலானியம் கண்டுபிடிப்புக்கான (வேதியலுக்கான) நோபல் பரிசு.
    - 1911-ம் ஆண்டு ரேடியத்தின் அணு எடை கண்டுபிடிப்பு (இயற்பியலுக்கான) நோபல் பரிசு பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- இந்தோனேஷியாவில் நடைபெற்ற ITF Futures ஆடவருக்கான டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வீரர் மைக்கேலினை தோற்கடித்து இந்தியாவின் நிக்கி பூனச்சா சாம்பியன் பட்டம் பெற்றுள்ளார்.

- உலக ஜீனியர் சைக்கிளிங் சாம்பியன் ஷிப் போட்டிகளில் வெள்ளிப்பதக்கம் வெல்லும் முதல் இந்தியர் என்ற பெருமையை "Esow Alben" பெற்றுள்ளார்.
    - இப்போட்டிகள் சுவிட்சர்லாந்து நாட்டில் நடைபெற்றது

We Shine Academy™

குறிப்பிடத்தக்கது.

**நியமனங்கள்**

- இந்திய அரசின் சாலை பாதுகாப்பு பிரச்சாரத்தின் விளம்பரத் தூதராக பாலிவுட் நடிகர் அக்ஷய் குமார் நியமிக்கப்பட்டுள்ளார். (Brand Ambassador for Road Safety Compaigns)
    - இவர் புது டெல்லியில், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு தொடர்பான வீடியோ பிரசாரத்தை தொடங்கியுள்ளார்.

We Shine Academy™